வழக்கு தொடர்ந்தனர். உயர்நீதிமன்றம் 2-7-93 அன்று கலைப்பு அதிகாரியை நியமித்து, அவர்களிடத்தில் பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்டுவிட்டன. எனவே, கலைப்பு அதிகாரியின் பொறுப்பில் இந்த ஆலை ஏற்றுக்கொள்ளப்பட்டது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக உறுப்பினர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 68, திரு. கி. தருமலிங்கம், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

68—

ஆறுகளில் தடுப்புச் சுவர் கட்டி மண் அரிப்பைத் தடுக்க நடவடிக்கை

***21511–திரு கி. தருமலிங்கம் :**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மண்அரிப்பைத் தடுப்பதற்கு ஜவ்வாது மலையிலிருந்து ஓடிவரும் கோயில் மலையாறு, புண்ணிய தீர்த்த நதி, அகரம் ஆறுகளில் தடுப்புச் சுவர் கட்டி, மண் அரிப்பைத் தடுக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

புண்ணிய தீர்த்த நதி மற்றும் அகரம் ஆறுகளில் மண் அரிப்பைத் தடுப்பதற்கு தடுப்புச் சுவர் கட்டும் திட்டத்திற்கான ஆய்வு 1994-95-ஆம் ஆண்டுகளில் எடுத்துக் கொள்ளப்படும்

திரு கி. தருமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை எடுத்துக்கொள்வதற்கு அரசு ஆயத்தமாக இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் கூறியிருப்பதற்காக முதலில் எனது நன்றியை நான் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த ஜவ்வாது மலையிலிருந்து ஓடிவரும் கோயில்மலையாறு, பாலாற்றில் வந்து கலக்கின்ற வரையில், 30 கிலோமீட்டர் தூரத்தில் ஏறத்தாழ 100 அடி ஆழத்திற்கு மண் அரிப்பை ஏற்படுத்துகிறது, இது காட்டாறு என்பதால். எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மிக விரைவாக, அவர்கள் கூறியதுபோல் ஆய்வு செய்து மண் அரிப்பைத் தடுப்பதற்கு ஆவன செய்வார்களா என்பதை மீண்டும் தங்கள் மூலமாக நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மண் அரிப்பைத் தடுக்கின்ற திட்டம் ப்ளானிங் அன்ட் டிசைன்ஸ் டிப்பார்ட்மென்ட் மூலம் தலைமைப் பொறியாளர்

1994 நவம்பர் 9]

அவர்களால் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று தெரிவித்திருக்கிறார்கள். அந்த ஆய்வை எடுத்தற்குப் பின்னாலேதான் எவ்வளவு நிதி ஒதுக்க முடியும் என்பதெல்லாம் கணக்கிலே வரும். ஆகவேதான் முதலிலே ஆய்வு முடிந்த பின்பு நிதியாதாரங்களுக்கு ஏற்ப அந்தப் பணியை அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 69, திரு. கே. தவசி, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர். திரு. கே. தவசி இருக்கையில் இல்லை.

வினா எண் 70, திருமதி ப. சரஸ்வதி, மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற் வளர்ச்சித்துறை அமைச்சர்.

70—

பரமத்தி வேலூர் வட்டத்தில் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம் அமைத்தல்

***33404-திருமதி ப. சரஸ்வதி :**

மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், பரமத்தி வேலூர் வட்டத்திற்கு தனியாக கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம் விரைவில் அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பரமத்தி வேலூர் வட்டத்தைத் தலைமையிடமாகக் கொண்டு பரமத்தி வேலூர் வட்டக் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம் புதிதாக ஏற்படுத்த அரசாணை நிலை எண். 438, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 3 ஜுன் 1994-ல் உத்திரவிடப்பட்டுள்ளது.

முற்பகல் 10-30

திருமதி ப. சரஸ்வதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரமத்தி வேலூர் வட்டம் நாமக்கல் வட்டத்திலிருந்து பிரிக்கப்பட்டு பல ஆண்டுகள் ஆகியும் அந்த வட்டத்திற்கு தனியாக அலுவலகங்கள் ஏதும் நிறுவப்படாமல் அனைத்து அலுவலகங்களும் நாமக்கல்லிலேயே